[16th July 1962

திரு. மீ. கலியாணசுந்தரம் : இப்பொழுது விதிவிலக்குக் கொடுக்க முன்வந்திருப்பது 40-ம் நம்பர் வரைக்கும் உட்பட்ட நூலுக்குத்தான். கைத்தறிக்கு 40-ம் நம்பருக்கு மேற்பட்டுத்தான் அதிகமாக தேவைப் படுகிறது. மேற்கொண்டு கைத்தறிக்குத் தேவையான நூலுக்காவது விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு யோசனை கூறுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் மாமனார் வீட்டையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறார் போலும். (சிரிப்பு). சேலத்திலே 60-ம் நம்பருக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. தமிழ் நாட்டிலே கைத்தறி நெசவாளர்கள் விரும்புவது எல்லாம் 40-ம் நம்பருக்குக் குறைவாகத்தான். 20, 26-ம் நம்பர்தான் அதிகமாகத் தேவைப்படுகிறது. மொத்தத் தேவையைக் கணக்கெடுத்துப் பார்த்தால் 40க்குக் குறைவாகத் தான் இருக்கிறது. சேலம் ஜில்லாவிலே ஒரு பகுதியிலும், கோவை ஜில்லாவிலே ஒரு சில பகுதிகளிலும் உயர்ந்த ரக நூல் தேவைப்படுகிறது. எனக்கு கைத்தறி நெசவாளர் சங்கங்களிடமிருந்து வந்த முறையீடு என்ன வென்றால், 40-ம் நம்பர் நூல் வரையிலாவது விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்த அளவுக்குச் செய்து கொடுத்திருக் கிறோம்.

திரு. வை. சங்கரன் : நமது தமிழ்நாட்டிலிருந்து வட ராஜ்யங்களுக்கு அனுப்பப்படும்படியான சேலைகள் எல்லாம் 80, 100 நம்பர் நூல் சேலை களாக அனுப்பப்படுவதால் இந்த ராஜ்ய வியாபாரிகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதன் மீது போடப்பட்டிருக்கிற வரியைக் குறைப்பதற்கு மேற்கொண்டு பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விஷயம் கூட மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அந்தத் துணியின் விலையை மற்ற ராஜ்யங்களில் விற்கக் கூடிய விலையுடன் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு, அந்த முறையில் எந்த விதமான நிவாரணமும் அளிக்க அவசியம் இல்லை என்று முடிவு செய்து விட்டார்கள்.

சுகாதாரத்துறை ஊழியர்கள் (மாவட்டக் கழகங்கள்).

* 326 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா போர்டுகள் எடுக்கப்பட்டு பஞ்சாயத்து யூனியன்கள் அமைந்தபோது, ஜில்லா போர்டு பணியிலிருந்து சுகாதாரத் துறை ஊழியர் கள் அனைவரும் அரசினர் சிப்பந்திகளாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனரா?

(இ) இல்லையெனில், என் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) No, Sir.

(இ) There is no statutory obligation to take over the entire public health staff of the erstwhile District Boards under Government.

* 327 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சுகாதார இலாகாவிலுள்ள எல்லா சர்விஸ்களையும் சர்க்கார் மயமாக்கி, சுகாதார டைரக்டரின் கீழ்க் கொண்டுவர வேண்டி பொது சுகாதார போர்டு உறுப்பினர் ஒருவர் செய்த முறையீடு அரசினருக்குக் கிடைத்ததா ?

16th July 1962]

(இ) அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) & (இ) No representation has been received by Government on the subject.

The Public Health Board which considered the suggestion of one of its members for the provincialisation of the local board health services resolved that the question be deferred for consideration to a later date after watching the arrangements now in operation. The question of Government taking action did not therefore arise.

* 328 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா——

(அ) பொது சுகாதார இலாகா சிப்பந்திகளைத் தனித்து இயங்கி வரும் பொது சுகாதார இலாகாவின்கீழ் கொண்டுவராமல் தனித்தனியாகப் பிரிந்து இருப்பதால் மேற்படி இலாகா வேலைகள் பாதிக்கப்படுவது உண்மையா ?

(இ) அப்படியானால், அதைத் தவிர்க்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவை ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) & (இ) Presumably the Member refers to the public health establishment under Panchayat Union Councils. If so it is now too early to say whether any difficulty has been experienced as the entire State is covered by Panchayat Union Councils only from 2nd October 1961. No difficulties have been brought to Government's notice so far.

திரு. து. ப. அழகமுத்து : சுகாதார சர்வீசுகளை சாக்கார் மயமாக்க வேண்டுமென்று பப்ளிக் ஹெல்த் போர்டு முடிவு செய்தும், ஸ்ரீ டி. புருஷோத்தமன், எம். எல். சி. அவர்கள் அதைப்பற்றி சிபாரிசு செய்ததன் பேரிலும் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவர்கள் கொண்டு வந்தது உண்மைதான். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறப் பட்டுவிட்டது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தொத்து வியாதிகளைப் போக்குவது அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு திட்டம் என்று ஒத்துக்கொண்டிருப்பதால் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் சர்வீஸ்களையாயினும் ஸ்டேட் சர்வீஸ் என்று கருதி, அந்த அளவுக்காவது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே சானிடரி இன்ஸ்பெக்டர்கள், ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் முதலியவர்கள் எல்லாம், பஞ்சாயத்து யூனியன் பொறுத்த மட்டில் இருக்கின்ற உத்தியோகஸ்தர்கள் போல், முனிசிபல் கமிஷனர் ஆட்சியின்கீழ் வருகிறார்கள். அப்படி கொஞ்சம் பேர்கள் சானிடரி இன்ஸ்பெக்டர்கள், ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் ப்ரமோஷன் பெற்றிருக்கிறார்கள்.

கள்ள நோட்டுகள்.

* 329 கேள்வி.—**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆந்திராவில் நூறு ரூபாய் கள்ள நோட்டுகள் அச்சடித்து இதர ராஜ்யங்களுக்கு வந்திருப்பதாக டில்லி போலீசார் நம் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்களா ?